அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

43 T I

## முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020
## First Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : ........................

கிறிஸ்தவம் I
Christianity I

காலம் : 2 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 50 வரையான சகல வினாக்களுக்கும் I, II, III, IV, V என்கிற விடைகளிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்க.**

01) 'யோவானின் உடல்' என அழைக்கப்படும் நூல் எது?
1) யோவான் நற்செய்தி 2) லூக்கா நற்செய்தி 3) மாற்கு நற்செய்தி
4) திருவெளிப்பாடு 5) யோவான் எழுதிய திருமுகங்கள்

02) பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டதை அழைப்பது
1) வல்கேற் 2) பிபிளுள் 3) செப்துவாஜின்ற் 4) பைபிள் 5) தனக்

03) இஸ்ராயேலருக்கு இராணுவத் தளமாக பயன்பட்ட சமவெளி
1) பெலிஸ்தியச் சமவெளி 2) செப்பலோ சமவெளி 3) சரோன் சமவெளி
4) எஸ்திரலோன் சமவெளி 5) கடற்கரைப் பகுதி

04) கத்தோலிக்கத் திருச்சபையானது விசுவாச அடிப்படையில் பழைய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 39 நூல்களுக்கு பதிலாக 46 நூல்களுக்கான வெளியீடு ஒன்றை முன்வைத்தது
1) நிசேயா பொதுச்சங்கத்தின் போது 2) எருசலேம் பொது சங்கத்தின் போது
3) முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின போது 4) இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின போது
5) திரி தெந்தின் பொதுச் சங்கத்தின் போது

05) 'தியோ' என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்
1) உலகம் 2) இறைவன் 3) அன்பு 4) படைப்பு 5) மூச்சு

06) இறை ஏவுதலால் நூல்களாக எழுதப்பட்ட திருமறை நூல்களின் நோக்கங்களில் ஒன்று
1) அன்பை வெளிப்படுத்தல் 2) உறவுகளை வளப்படுத்தல்
3) தீய எண்ணங்களை அகற்றுதல் 4) கல்வியை பெற்றுக் கொடுத்தல்
5) வாழ்க்கையை செல்வச் செழிப்புள்ளதாக மாற்றுதல்

07) புராதன பலஸ்தீனாவின் எல்லைகள்
1) வடக்கில் கடற்கரை தெற்கில் சமவெளி 2) வடக்கில் தாண் தெற்கில் பெயர்செபா
3) வடக்கில் சரோன் தெற்கில் சமாரியா 4) வடக்கில் அக்கோ தெற்கில் தாண்
5) வடக்கில் எருசலேம் தெற்கில் கலிலேயா

08) குலமுதுவர் யாக்கோபுவின் புதல்வன் யோசேப்பு இஸ்மயேலருக்கு விற்கப்பட்ட இடம்
1) செக்கேம் 2) பெத்தேல் 3) சமாரியா 4) நாசரேத் 5) தோத்தான்

09) இஸ்ராயேல் இனத்தவர் எகிப்தில் வாழ்ந்த வருடங்கள்
1) 420 2) 450 3) 300 4) 430 5) 330

10) இறையருளைப் பெற்ற போர் வீரர்களாக திகழ்ந்தவர்கள்.
1) நீதித்தலைவர்கள் 2) அரசர்கள் 3) இறைவாக்கினர்
4) படைத்தளபதிகள் 5) குருக்கள்



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

11) இஸ்ராயேலுக்கு நிரந்தரமான படை ஒன்றினை வழங்கிய பெருமையை உடைய அரசன்.
1) தாவீது அரசர் 2) சாலமோன் அரசன் 3) சவுள் அரசன்
4) யோசியா அரசன் 5) யோயாக்கின்

12) தாவீதின் பரம்பரையில் கடைசி அரசன்
1) யோயாக்கின் அரசன் 2) யோசியா அரசன் 3) யோயாக்கிம் அரசன்
4) சாலமோன் அரசன் 5) சேதாக்கியா அரசன்

13) யூதா நாட்டின் ஆளுனராகப் பணியாற்றியவர்.
1) எஸ்ரா 2) நெகேமியா 3) செருபாபேல் 4) யூதித்து 5) எஸ்தர்

14) அஞ்சாதீர்கள். நிலை குலையாதீர்கள். இன்று ஆண்டவர் தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயல்களை பாருங்கள் என இஸ்ரயேலருக்கு கூறியவர்.
1) ஆபிரகாம் 2) எசாயா 3)மோசே 4) ஆரோன் 5) யோசுவா

15) இரண்டாவது படைப்பு கதைப்படி மனிதன் இறைவனோடு படைப்புச் செயல்பாட்டில் தொடர்பு கொள்வது
1) உயிருள்ள அனைத்திற்கும் பெயர் இட்டதன் மூலம் 2) படைப்பை ஆளுவதன் மூலம்
3) படைப்பை விருத்தி செய்வதன் மூலம் 4) பாவத்திலிருந்து விலகி இருப்பதன் மூலம்
5) பலி ஒப்புக் கொடுப்பதன் மூலம்

16) யோசுவாவின் தலைமைத்துவத்தின் கீழ் இஸ்ராயேலர் கைப்பற்றியது
1) கலிலேயாவை 2) எருசலேமை 3) பலஸ்தீனாவை
4) எரிகோவை 5) சமாரியாவை

17) இஸ்ராயேல் கலாசார ரீதியான சொந்தம் கொண்டாடிய மக்கள் குழுவினர்
1) ஹிக்சோலியர் 2) பாரசீகர் 3) எபேசியர் 4) எபிரேயர் 4) எகிப்தியர்

18) ‘‘நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன்’’ இக்கூற்று தொடர்புடைய சம்பவம்
1) ஆபிரஹாம் இறைவனோடு உடன்படிக்கை செய்த போது
2) ஈசாக்குடன் இறைவன் உடன்படிக்கையைப் புதுப்பித்த போது
3) யாக்கோபு கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி பெற்ற போது
4) லூசு எனும் இடத்தில் யாக்கோபு இறைவனை கண்டபோது
5) மோசே இறைவனால் அழைக்கப்பட்ட போது

19) வாக்குப் பண்ணப்பட்ட பூமிக்கு சென்ற பயணத்தில் இஸ்ராயேல் மக்களுக்கு நீர் கிடைத்த இரண்டு இடங்கள்
1) தீர், சீதோன் 2) யோய்தாள், சமாரியா 3) பெர்செபா, சீதோன்
4) தீர், யோர்தான் 5) மாசா, மெரிபா

20) எரேமியா என்ற பெயரின் அர்த்தம்
1) யாவேயினால் மீட்புப் பெறல் 2) இறைவன் பலப்படுத்துகிறார் 3) யாவே மீட்பராய் இருக்கின்றார்
4) இறைவன் இரக்கம் உள்ளவர் 5) யாவே உயர்த்துகின்றார்

21) சமூக நீதியின் இறைவாக்கினர் என்று அழைக்கப்பட்டவர்
1) ஓசேயா 2) எரேமியா 3) ஆமோஸ் 4) எசேக்கியேல் 5) நாக்கூம்

22) வாழ்வின் பொருள் அதில் உள்ள பிரச்சினைகள் உலகம் பற்றிய சிந்தனையோடு செய்யப்படுகின்ற ஒரு விளக்கம் எனக்கூறும் ஞானம்
1) ஆன்மிக ஞானம் 2) குடும்ப மற்றும் கோத்திர ஞானம்
3) அரசசபை ஞானம் 4) அன்றாட வாழ்வு பற்றிய ஞானம்
5) சீராக்கின் ஞானம்

23) எருசலேமின் மகிமையை புகழ்வதற்கு விசேடமாக திருப்பயணங்களின் போதும் பாடப்படும் திருப்பாடல்களின் வகை
1) புலம்பல் பாடல் 2) நன்றி பாடல் 3) சீயோன் பாடல்
4) அரச பாடல்கள் 5) நம்பிக்கையின் பாடல்கள்

24) யூத சட்டங்கள் செயல்படுத்தப்பட்ட இடமாகிய செனத்திரின் சபையில் அங்கம் வகித்தவர்
1) புனித யாக்கோபு 2) அரிமத்தியா யோசேப்பு 3) புனித பவுல்
4) புனித பேதுரு 5) புனித லூக்காஸ்



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

25) மறுபிறவி உயிர்த்தெழுதல் பற்றிய கருத்தை ஏற்றுக் கொள்ளாது அழியாத ஆன்மா, மற்றும் மரணத்தின் பின்னரான மகிழ்ச்சி பற்றிய நம்பிக்கை அற்றவர்கள்
1) பரிசேயர் 2) மறைநூல் அறிஞர் 3) செலஸ்தியர்
4) சதுசேயர் 5) எஸ்சேனியர்

26) மனு உரு எடுத்த இயேசு கிறிஸ்து யூத மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மெசியா என்பதை தெளிவாக்கும் நோக்குடன் எழுதப்பட்ட நற்செய்தி
1) தூய மாற்கு நற்செய்தி 2) தூய மத்தேயு நற்செய்தி 3) தூய லூக்கா நற்செய்தி
4) தூய யோவான் நற்செய்தி 5) திருத்தூதர் பணி நூல்

27) லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட காலப்பகுதி
1) கிறிஸ்துவுக்குப் பின் 65 – 70 2) கிறிஸ்துவுக்கு பின் 80 – 90
3) கிறிஸ்துவுக்குப் பின் 90 - 100 4) கிறிஸ்துவுக்கு பின் 80 – 90
5) கிறிஸ்துவுக்குப் பின் 60 – 80

28) தூய பவுல் இறையருளை உணர்த்த பயன்படுத்திய கிரேக்க சொல்லான காரியுஸ் என்பதன் பொருள்
1) இரக்கம் 2) நிலையான நம்பிக்கை 3) உண்மையான நம்பிக்கை
4) எப்போதும் பொறுமை 5) நேர்மையான கீழ்ப்படிதல்

29) பவுலின் இரண்டாவது தூதுபயணத்தில் பங்கு பற்றியவர்
1) பர்ணபா 2) யோவான் மாற்கு 3) லூக்கா 4) எரெஸ்து 5) தீத்து

30) நேர்த்திக் கடனுக்காக பவுல் தனது முடியை வெட்டிக் கொண்ட இடம்
1) எபேசு 2) கொரிந்து 3) எதென்ஸ் 4) பிலிப்பு 5) கெங்கிரேயா

31) ''மக்காரியோயி'' எனும் கிரேக்கச் சொல்லின் பொருள்
1) பெருமகிழ்ச்சி உடையோர் 2) அன்புடையோர் 3) அமைதியை உடையோர்
4) விசுவாசத்தை உடையோர் 5) கடவுளைக் காணும் வரம் உடையோர்

32) திருச்சபையின் பொது சங்கங்களில் முதற்சங்கமாக இருப்பது
1) காத்தேச் பொதுச்சங்கம் 2) எபேசு பொதுச்சங்கம் 3) எருசலேம் பொதுச்சங்கம்
4) நிசேயா பொதுச்சங்கம் 5) திரிதெந்தின் பொதுச்சங்கம்

33) "மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்குகின்ற வித்தாகும்" எனும் பெறுமதிவாய்ந்த கூற்றை முன்வைத்தவர்.
1) தூய எயுசேபியுஸ் 2) தூய தேர்த்தூலியன் 3) தூய அத்தனாசியார்
4) கொன்ஸ்தாந்தின் பேரரசன் 5) அலெக்சாந்திரியாவின் ஆயர்.

34) "இதோ வானம் திறந்து இருப்பதையும் மானிடமகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கின்றேன்" எனக் கூறியவர்.
1) பிலிப்பு 2) நிக்கானோர் 3) பர்மனா 4) ஸ்தேவான் 5) தூய பவுல்

35) விருத்தசேதப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்ட சபை
1) எருசலேம் சங்கம் 2) எபேசு பொதுச் சங்கம் 3) திரிதெந்தின் பொதுச் சங்கம்
4) நிசேயா சங்கம் 5) வத்திக்கான் சங்கம்

36) நீரோவின் கொடிய கலாபனைக் காலத்தில் கொலை செய்யப்பட்டவர்கள்
1) தூய யோவான் 2) எருசலேம் பேராயர் டேமியன் 3) புனித டெமற்றில்டா
4) பேதுரு, பவுல் 5) புனித ஜஸ்ரின்

37) மிலான் சாசனத்தின் மூலமாக கிறிஸ்தவர்களுக்கு சுதந்திரமான காலம் உதயமானது. அவ் சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்த அரசன்.
1) பேரரசன் தொமீசியன் 2) பேரரசன் திராஜன் 3) பேரரசன் மாக்சிமியன்
4) பேரரசன் தேசியுசின் 5) பேரரசன் கொன்ஸ்தாந்தின்

38) கத்தோலிக்க திருச்சபையின் மரபு ரீதியான நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்பட்டவர்.
1) புனித ஜெரோம் 2) இறையியலாளரான அத்தனாசியார் 3) புனித ஜஸ்டின்
4) புனித சிறில் 5) புனித அகுஸ்தினார்



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

39) 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி "நற்கருணையின் புனிதத்துவம்" எனும் சுற்றுமடலை வெளியிட்ட திருத்தந்தை
1) திருத்தந்தை 19 ஆம் பத்திநாதர்
2) திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற்
3) திருத்தந்தை 1ஆம் பிரான்சிஸ்
4) திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்
5) திருத்தந்தை 23ஆம் அருளப்பர் சின்னப்பர்

40) எல்லா ஞாயிறு தினங்களிலும் திருப்பலியின் போது மறை உரை நிகழ்த்த வேண்டும் என குருக்களுக்கு கட்டளையிட்ட திருத்தந்தை
1) திருத்தந்தை 13ம் சிங்கராயர்
2) திருத்தந்தை பத்தாம் பத்திநாதர்
3) திருத்தந்தை 12ஆம் பத்திநாதர்
4) திருத்தந்தை 23ஆம் அருளப்பர்
5) திருத்தந்தை 11ஆம் பத்தினாதர்

41) இலங்கைக்கு மறைத்தூது பணிக்காக முதன்முதலில் வருகைதந்த மறைத்தூதுவர்கள்
1) அகுஸ்தினார் சபை
2) டெமினிக்கன் சபை
3) பிரான்சிஸ்கன் சபை
4) இயேசு சபை
5) கார்மேல் சபை

42) ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய முடியாத எதையும் தனது மரணத்தருவாயில் நிறைவேற்ற முடியாது எனக் கூறியவர்
1) புனித ஜெரோம்
2) புனித அகுஸ்தினார்
3) பிலிப் பல்தேயுஸ் பாதிரியார்
4) யாக்கோமே கொன்சாலல்வெஸ்
5) புனித ஜோசப் வாஸ் அடிகளார்

43) வேதாகம ஞாயிறாக பிரகடனப்படுத்தப்பட்ட திகதி
1) ஒவ்வொரு வருடமும் தை முதலாம் ஞாயிறு
2) ஒவ்வொரு வருடமும் டிசம்பர் முதலாம் ஞாயிறு
3) ஒவ்வொரு வருடமும் மாசி முதலாம் ஞாயிறு
4) ஒவ்வொரு வருடமும் மார்கழி முதலாம் ஞாயிறு
5) ஒவ்வொரு வருடமும் பங்குனி முதலாம் ஞாயிறு

44) இலங்கையின் முதலாவது சிங்கள ஆயர்
1) பெட்டிக் ஒசானாம் ஆண்டகை
2) வியானி பெனாண்டோ ஆண்டகை
3) மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
4) எட்மன் பீரிஸ் ஆண்டகை
5) தோமஸ் பெஞ்ஜமின் கூறே ஆண்டகை

45) திருச்சபையின் பண்புகளில் ஒன்று
1) கத்தோலிக்கம்
2) கிறிஸ்தவம்
3) அன்பு
4) தியாகம்
5) பகிர்வு

46) தேசிய குருக்களை பயிற்றுவிப்பதற்காக இலங்கையில் முதலாவது குருத்துவ கல்லூரியை ஆரம்பித்தவர்.
1) புனித யோசேவாஸ் அடிகளார்
2) அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்
3) அருட்தந்தை கிறிஸ்தோபர் பொன்ஜீன் அடிகளார்
4) மேன்மை தாங்கிய ஆயர் எட்மன்ட் பிரிஸ் ஆண்டகை
5) மேன்மை தாங்கிய ஆயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை

47) கிறிஸ்தவ குடும்பம் திருச்சபையின் உயிர்நாடி, கிறிஸ்தவ குடும்பங்கள் பல ஒன்றுசேர்ந்து கட்டியெழுப்பிய விசேட குடும்பம் திருச்சபை ஆகும் என பவுல் கூறியது.
1) உரோமையருக்கு
2) கொரிந்தியருக்கு
3) எபேசியருக்கு
4) கலாத்தியருக்கு
5) எபிரேயருக்கு

48) மக்காரெஸ் என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்
1) தூதர்கள்
2) மறைப்பணியாளர்கள்
3) வேறு ஒருவரிடம் இருந்து கற்கின்ற ஒருவர்
4) திருத்தொண்டர்கள்
5) சிறந்த பணியை மேற்கொள்வோர்

49) திருச்சபையின் பிறந்தநாள் என அழைக்கப்படும் நாள்
1) உயிர்ப்பு நாள்
2) பெரிய வியாழன்
3) கிறிஸ்து பிறப்பு நாள்
4) விண்ணேற்பு நாள்
5) பெந்தகோஸ்து நாள்

50) மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும் என்றும் ஏழைகள் பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வு மறைய வேண்டும் என்றும் எடுத்துரைத்த சுற்று மடல்
1) அவனியில் அமைதி
2) மனித உழைப்பு
3) தொழிலாளர் சாசனம்
4) அன்னையும் ஆசிரியையும்
5) மனித முன்னேற்றம்


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

43 T II

முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020
First Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : .......................

கிறிஸ்தவம் II
Christianity II

காலம் : 3 மணி

- **பகுதி I இலிருந்து 2 வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து 3 வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

(01) 1) இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியதைப் பற்றி குறிப்பிடும் இரு பாரம்பரியங்களையும் எழுதுக.
2) திருத்தொண்டர் பிலிப்புவால் ஆற்றப்பட்ட பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
3) கலாபனை காலத்தில் கிறிஸ்தவர்களிடம் மிளிர்ந்த பண்புகள் மூன்று தருக.
4) புனித அகுஸ்தினாரின் வாழ்வின் மூலம் ஒரு கிறிஸ்தவன் பெற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகள் நான்கைக் குறிப்பிட்டு விளக்குக.

(02) 1) இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையைப் பற்றி கூறும் இரு மரபுகளை தருக.
2) ஈசாக்கின் வாழ்வில் இருந்து உமக்குக் கிடைக்கும் படிப்பினைகள் நான்கு தருக.
3) யாக்கோபு யோசேப்பை அதிகமாக நேசித்தமைக்கு காரணங்கள் மூன்று தருக.
4) ஆபிரகாம் தம் வாழ்க்கை சவால்களுக்கு முகம் கொடுத்த விதம் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சவாலாகும் என்பதற்கு நான்கு காரணங்கள் தருக.

(03) 1) நான்கு நற்செய்திகளினதும் அடையாளங்களை தருக.
2) சமநோக்கு நற்செய்திகளின் பெயர்களைத் தருக.
3) சமநோக்கு நற்செய்திகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் நான்கு தருக.
4) சமநோக்கு நற்செய்திகளுக்கும் யோவான் நற்செய்திக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் நான்கு தருக.

## பகுதி II

(04) 1) பவுலிடமிருந்து கிறிஸ்தவர்களுக்கு கிடைக்கும் முன்மாதிரியான விடயங்கள் ஐந்தை கூறி விளக்குக.
2) ஒரு கிறிஸ்தவன் எவ்விதம் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை பிலிப்பியர் திருமுகத்தின் அடிப்படையில் ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக.

(05) 1) இரண்டாம் வத்திக்கான் சங்கம் பற்றி ஐந்து விடயங்களை முன்வைத்து விபரிக்குக.
2) எட்டாம் நூற்றாண்டின் திருச்சபையில் நிகழ்ந்த முக்கிய விடயங்கள் ஐந்தினை குறிப்பிட்டு விளக்குக.

(06) 1) இறைவாக்கினரின் போதனைகளில் மெசியா பற்றிய படிப்பினைகள் ஐந்தினை முன்வைத்து விளக்குக.
3) இன்றைய நவீன யுகத்திற்கு இறைவாக்கினர்களின் போதனைகளை பொருந்தும் என்பதை ஐந்து உதாரணங்களுடன் விளக்குக.

(07) 1) ஒல்லாந்தர் கலாபனையின் மத்தியில் இந்நாட்டுக் கத்தோலிக்க பக்தர்கள் காண்பித்த பிரதி பதில்கள் ஐந்து எழுதி விளக்குக.
2) நவீன வேதகலாபனை காலத்தில் இந்நாட்டு கத்தோலிக்க மாணவன் என்ற ரீதியில் நீர் செயற்படும் முறைகள் ஐந்தினை முன் கூறி விளக்குக.

(08) 1) இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் அனுபவித்த இரைபராமரிப்புகள் பற்றி ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக.
2) நீர் உமது வாழ்வில் அனுபவித்த இறை பராமரிப்பு சந்தர்ப்பங்கள் ஐந்தை ஆதாரமாகக் காட்டி இறை தந்தை மிகுந்த அன்பும் இரக்கமும் உள்ளவர் என்பதை விளக்குக.



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, விநியோகிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020
## கிறிஸ்தவம் II
## Christianity II
## Answer

விடைகள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 - 4 | 9 - 4 | 17 - 1 | 25 - 4 | 33 - 2 | 41 - 4 | 49 - 5 |
| 2 - 1 | 10 - 1 | 18 - 3 | 26 - 2 | 34 - 4 | 42 - 5 | 50 - 4 |
| 3 - 2 | 11 - 3 | 19 - 5 | 27 - 4 | 35 - 1 | 43 - 2 | |
| 4 - 5 | 12 - 5 | 20 - 5 | 28 - 1 | 36 - 4 | 44 - 4 | |
| 5 - 2 | 13 - 2 | 21 - 3 | 29 - 3 | 37 - 5 | 45 - 1 | |
| 6 - 3 | 14 - 3 | 22 - 1 | 30 - 5 | 38 - 2 | 46 - 3 | |
| 7 - 2 | 15 - 1 | 23 - 3 | 31 - 1 | 39 - 4 | 47 - 3 | |
| 8 - 5 | 16 - 4 | 24 - 2 | 32 - 3 | 40 - 1 | 48 - 3 | |

பகுதி II

01 i. தரம் - 13. ஆ. வழிகாட்டி - பக். 08
2 பக் - 14
3 பக் - 22. 23
4 பக் - 30

02 i தரம் - 12. அ. வ. பக் - 43
ii பக் - 46
3 பக் - 48
4 பொ. வி. பு. கிடுக.

03. i தரம் - 12. அ. வ. பக்.
2 பக் -
3 பக் - 115
4 பக் - 117

04 i தரம் - 12 பக் - 135
2 பக் - 141

05 i தரம் - 13 பக் - 60
2 பக் - 43

06 i தரம் - 12 பக் - 74 - 81
2 பொ. வி. பு. கிகை.

07. i. தரம் - 13 - பக் 74
2. பொ. வி. பு. கி.

08 1. தரம் 12 - பக் - 58
2. பொ. வி. பு. கி.



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

WWW.LOL.LK


# BUY

## PAST PAPERS

## 071 777 4440

Buy Online - www.LOL.lk

- GCE O/L
- GCE A/L
- PAST PAPERS
- SHORT NOTES



Protect Yourself From Coronavirus

# YOU STAY AT HOME




# WE DELIVER!

**ORDER NOW**

**075 699 9990**

**WWW.LOL.LK**

☰ LOL.lk
Learn Ordinary Level

**TOP CATEGORIES**

- GCE O/L Exam NEW
- Grade 09, 10 & 11 ›
- Grade 06, 07 & 08 ›
- Grade 04 & 05 ›
- Grade 01, 02 & 03 ›
- About Us ›
- Shop HOT
- Cart

**HUGE SALE – SHOP NOW**




**ISLANDWIDE DELIVERY**
Free delivery on all orders over Rs. 3500

**More than 1000+ Papers**
For all major Subjects and mediums

**ONLINE SUPPORT 24/7**
Shopping Hotline 071 777 4440

## FEATURED PRODUCTS

**SORT BY**

- GCE O/L Exam



GCE O/L EXAM, SCIENCE
O/L Science Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, MUSIC
O/L Music Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART



GCE O/L EXAM, MATHEMATICS
O/L Mathematics Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART



GCE O/L EXAM, INFORMATION & COMMUNICATION TECHNOL...
O/L Information & Communication Tec...
රු 350.00



GCE O/L EXAM, HISTORY
O/L History Past Paper Book
රු 350.00



GCE O/L EXAM, HEALTH & PHYSICAL EDUCATION
O/L Health & Physical Education Past P...
රු 350.00